நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## கோழிகளுக்கு இறக்கை அழுகல் நோய் ஏற்படும் அபாயம்

First Published : 10 Sep 2011 09:22:21 AM IST

நாமக்கல், செப். 9: கோழிகளுக்கு இறக்கை அழுகல் நோய் ஏற்படும் அபாயம் நிலவுவதாக நாமக்கல் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக வானிலை ஆலோசனை மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அம் மையம் வெள்ளிக்கிழமை வெளியிட்ட அறிக்கை: தென்மேற்கு பருவமழையின் தாக்கம் மிதமான அளவிலேயே காணப்படுவதால் மேகமூட்டத்தின் அளவு குறையும். இதன் விளைவாக, பகல்வெப்பம் உயரும். அதே சமயம், இரவு வெப்பமும் லேசாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மழை அளவு குறைந்து பகல் வெப்பம் உயர வாய்ப்பு ஏற்பட்டிருப்பதால், கோழிகளின் தீவன எடுப்பு குறைந்து காணப்படும். சூரியகாந்தி புண்ணாக்கில் பூஞ்சை அக்ரா நச்சு தென்படுகிறது. எனவே, பரிசோதனைக்குட்படுத்தி பூஞ்சை நச்சை நீக்கிய பிறகே புண்ணாக்கை கோழித் தீவனத்தில் சேர்க்க வேண்டும்.

கடந்த வாரம் கோழியின நோய் பரிசோதனை மற்றும் கண்காணிப்பு ஆய்வகத்தில் ஆய்வு செய்யப்பட்ட கோழிகள் பெரும்பாலும் இறக்கை அழுகல் நோய், ஈகோலை நோய்களால் இறந்து இருப்பது தெரியவந்துள்ளது. இந்த நோய்கள் பரவாமல் தடுக்க முதலில் பண்ணைகளை சுகாதாரமாக பண்ணையாளர்கள் பராமரிக்க வேண்டும். பிறகு கோழிகளுக்கு வழங்கப்படும் நீரில் நச்சு கிருமிகள் நீக்கப்பட வேண்டும். தண்ணீரில் கிருமிகள் இருப்பது தெரியவந்தால், கிருமிநாசினியைப் பயன்படுத்த வேண்டும். இறக்கை அழுகல் நோயைக் கட்டுப்படுத்த கால்நடை மருத்துவரின் ஆலோசனைபேரில் மருந்துகளை தீவனத்தில் சேர்த்து வழங்க வேண்டும்.

விவசாயிகளுக்கான ஆலோசனை: அக்டோபர் மாதம் 3-வது வாரத்தில் வடகிழக்கு பருவமழை துவங்க தாமதமாகும். மழை குறைவாகக் காணப்படுவதால், மீன் குளங்களில் பராமரிப்புப் பணிகளை ஒப்பந்ததாரர்கள் மேற்கொள்ளலாம். வடகிழக்கு பருவமழை துவங்கும்போது குளங்களில் விட மீன் குஞ்சுகளைத் தயாராக வைத்திருக்க வேண்டும்.

**வேளாண் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு ரூ. 8.70 கோடி**

First Published : 10 Sep 2011 10:18:37 AM IST

திருவாரூர், செப். 9: திருவாரூர் மாவட்டத்தின் வேளாண் மேம்பாட்டுத் திட்டங்களுக்கென நிகழ் நிதியாண்டுக்கு ரூ. 8.70 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் ச. முனியநாதன்.

தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றது. கூட்டத்துக்கு மாவட்ட ஆட்சியர் ச. முனியநாதன் தலைமை வகித்துப் பேசியது:

திருவாரூர் மாவட்டத்தில் வேளாண் மேம்பாட்டுத் திட்டங்களுக்கென வேளாண் விரிவாக்க மற்றும் சீரமைப்புத் திட்டத்தின் (அட்மா) கீழ் பயிற்சி, செயல்விளக்கம், கண்டுணர் சுற்றுலா, பயிர் ஆர்வலர் பயிற்சி, கண்காட்சி அமைத்தல், விவசாயிகளுடனான கலந்துரையாடல், வயல்வெளிப் பள்ளி உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள ரூ. 1.55 கோடி, தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் நெல்லுக்கு திருந்திய நெல் சாகுபடி செயல் விளக்கம், உயரிய ஒட்டுநெல் பயிர் விளக்கம், நுண்ணூட்டக்கலவை, வீரிய ஒட்டுநெல், இயந்திர உழுவை, கைத்தெளிப்பான், பம்புசெட், சுழற்கலப்பை, கோனோவீடர் உள்ளிட்டவை விநியோகத்துக்கென ரூ. 5.50 கோடி, தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டத்தில் பயறு வகை சாகுபடிக்கென ஆதார விதை உற்பத்தி, ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு, தெளிப்புப் பாசனக் கருவி, களைக்கொல்லி, உரம் மற்றும் இடுபொருள்கள் விநியோகம் உள்ளிட்ட பணிகளுக்காக ரூ. 1.32 கோடி என மொத்தம் ரூ. 8.70 கோடியை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்த நிதியைப் பயன்படுத்தி முழுமையான விவசாயப் பகுதியான திருவாரூர் மாவட்டத்தில் நெல்லுடன் குறைந்தகால பயிர்களான பயறு வகை சாகுபடி போன்று, பணப் பயிர்களை சாகுபடி செய்ய விவசாயிகளை ஊக்கப்படுத்த வேண்டும். திருவாரூர் மாவட்டத்தில் வேளாண் வளர்ச்சிக்கு அனைத்துத் துறை அலுவலர்களும் ஒத்துழைக்க வேண்டும் என்றார் ஆட்சியர்.

கூட்டத்தில் வேளாண் இணை இயக்குநர் க. மயில்வாகணன், துணை இயக்குநர் ஆர். கபிலன், உதவி இயக்குநர் நடேசன், முன்னோடி வங்கி மேலாளர் பாண்டியன், கால்நடை உதவி இயக்குநர் மதனகோபால், வேளாண் அலுவலர் ஹேமா ஹெப்சிபா நிர்மலா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**தமிழகத்தில் மழை பெய்ய வாய்ப்பு**

First Published : 10 Sep 2011 01:46:08 AM IST

சென்னை, செப்.9: தமிழகத்தில் சனிக்கிழமை மழை பெய்ய வாய்ப்பு உள்ளது என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகம், புதுவையில் சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை மாலை மற்றும் இரவு நேரங்களில் லேசான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

சென்னையில் வெள்ளிக்கிழமை 1.6 மி.மீ (மில்லி மீட்டர்) மழை பதிவானது. சனிக்கிழமை சென்னையில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை மற்றும் இரவு நேரங்களில் இடியுடன் கூடிய கன மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 36 டிகிரி செல்சியஸ் ஆக இருக்கும் எனவும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**பொள்ளாச்சியில் வாழைத்தார் விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 10,2011,02:18 IST

பொள்ளாச்சி : பொள்ளாச்சி சந்தையில், ஓணம் பண்டிகையையொட்டி வாழைத்தாரின் விலையில் ஏற்றம் ஏற்பட்டது. கேரள வியாபாரிகளின் வருகையும் அதிகளவில் இருந்ததால், சந்தை "களை' கட்டியது. பொள்ளாச்சி சந்தைக்கு புதுக்கோட்டை, கணியூர் சுற்றுப்பகுதிகளிலிருந்து வாழைத்தார் வரத்துள்ளது. கேரளாவுக்கான வாழைத்தார் பொள்ளாச்சியிலிருந்தே அதிகளவு கொண்டு செல்லப்படுகிறது. இந்நிலையில், கேரள மக்களின் முக்கிய பண்டிகைகளில் ஒன்றான ஓணம் பண்டிகை நேற்று கொண்டாடப்பட்டதால், வாழை பழங்களுக்கான தேவை அதிகரித்தது. இதனால், ஒரு வாரமாக புதுக்கோட்டை பகுதியிலிருந்து ஆயிரம் கிலோ வாழைத்தார் வரத்தாக உள்ளது. இதில், கேரளாவுக்கு மட்டும் 75 சதவீதம் அனுப்பப்படுகிறது. வாழைத்தாருக்கான தேவை உள்ளதால், விலையிலும் ஏற்றம் இருந்தது. வாழைத்தாரை ஏலம் எடுக்க கேரள வியாபாரிகள் பொள்ளாச்சி சந்தைகளில் முகாமிட்டதால், சந்தை "களை' கட்டியது. கடந்த வாரத்தை விட இந்த வாரம் வாழைத்தார் ஒன்றுக்கு 150 ரூபாய் விலை கூடியது. வாழைத்தார்

விலை நிலவரம் : பூவன் - 300, மோரிஸ் - 350, கற்பூரவல்லி - 300, செவ்வாழை - 500, நேந்திரம் (கிலோ) - 40, ரஸ்தாளி - 400, கதளி (கிலோ) - 38 என விலை போனது. பொள்ளாச்சி காந்தி மார்க்கெட் வியாபாரி கிருஷ்ணன் கூறுகையில், ""ஓணம் பண்டிகையையொட்டி, வாழைத்தாரின் விலை உயர்ந்தது. குறிப்பாக, நேந்திரம் வாழைத்தாரின் விலை உயர்ந்து காணப்பட்டது. பண்டிகை முடிந்ததால், இனி வரும் வாரங்களில் விலை குறையும். தற்போதுள்ள புதுக்கோட்டை சீசன் இன்னும் இரண்டு மாதங்களுக்கு நீடிக்கும் என்பதால் வரத்து சீராக இருக்கும்," என்றார்.

**வேளாண் மையங்களில் வானிலை முன்னறிவிப்பு : துணை இயக்குனர் தகவல்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 10,2011,02:18 IST

அன்னூர் : "வேளாண் மையங்களில் வானிலை முன்னறிவிப்பு எழுதி வைக்கப்படுகிறது' என, துணை இயக்குனர் அன்னூரில் தெரிவித்தார். தமிழ்நாடு வேளாண் பல்கலையும்,வேளாண்துறையும் இணைந்து வட்டார அளவில், தானியங்கி வானிலை நிலையங்கள் அமைத்துள்ளன. இதன்மூலம் அதிகபட்ச, குறைந்தபட்ச வெப்பநிலை, மழையளவு உள்ளிட்ட 10 வகை விபரங்கள் சேகரிக்கப்பட்டு, ஒவ்வொரு மணி நேர இடைவெளியில் இணையதளத்தில் வெளியிடப்படுகிறது. அன்னூர் வட்டாரத்தில், குப்பேபாளையம், ஜி.ஆர்.ஜி., பாலிடெக்னிக் வளாகத்தில் 2009, செப்டம்பரில், ஏழு லட்சம் ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட்ட இந்நிலையத்தை வேளாண் துணை இயக்குனர் இளங்கோ பார்வையிட்டு, செயல்பாடு, பராமரிப்பு குறித்து ஆய்வு செய்தார். அதன்பின் அவர் கூறியதாவது:வானிலை நிலையங்கள் மூலம் குறுகிய தூர வானிலை குறித்து, முன்னறிவிப்பு செய்ய முடிகிறது.
அடுத்த ஒரு வார காலத்திற்கான வானிலை முன்னறிவிப்பையும் தெரிந்து கொள்ள முடியும். மானாவாரி சாகுபடி விவசாயிகளுக்கு, பயிர் விதைப்பு, பூச்சி நோய் தாக்குதல், மண்ணின் ஈரத்தன்மை, மழை பெய்ய வாய்ப்பு ஆகிய தகவல்களை தெரிந்து கொள்ள உதவுகிறது. வானிலை முன்னறிவிப்பு, அனைத்து வேளாண் விரிவாக்க மையங்களிலும் எழுதி வைக்கப்படுகிறது. இணைய தள வசதி உள்ளவர்கள் வேளாண் பல்கலை வெப்சைட்டிலும் பார்த்து தெரிந்து கொள்ளலாம். இந்த விபரங்களை பயன்படுத்தி, வட்டார அளவிலான வேளாண் தொழில்நுட்பங்களை வேளாண்துறை அலுவலர்கள் தெரிவிப்பார்கள். இவ்வாறு, துணை இயக்குனர் இளங்கோ தெரிவித்தார். உதவி இயக்குனர் (பொறுப்பு) சீனிராஜ் கூறுகையில்,""பருவ மழை சார்ந்த விவசாயத்தின் வெற்றி அப்பகுதியில் நிலவும் காலநிலையை பொறுத்தே அமையும். பயிர் மேலாண்மைக்கு தேவையான காலநிலை காரணிகளை பற்றி விவசாயிகளுக்கு உடனுக்குடன் தெரிவிப்பதன்மூலம், காலநிலை இடர்பாடுகளால் ஏற்படும் பாதிப்புகளை

குறைக்க முடியும்," என்றார். கோவை வேளாண் அலுவலர் மீனாம்பிகை, உதவி வேளாண் அலுவலர்கள் பிரவீண் குமார், வேல்முருகன் உள்பட பலர் பங்கேற்றனர்.

**பட்டுப்புழு வளர்ப்பில் நோயை தடுக்க செயல் விளக்க முகாமில் ஆலோசனை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 10,2011,02:05 IST

உடுமலை : பட்டுப்புழு வளர்ப்பில், ஊசி ஈ மற்றும் வேர் அழுகல் நோயை தடுக்க விவசாயிகள் ஒருங்கிணைந்த முறையில் வளர்ப்பை மேற்கொள்ள வேண்டும் என செயல்விளக்க முகாமில் ஆலோசனை வழங்கப்பட்டது. உடுமலை அருகே சித்தக்குட்டை கிராமத்தில் மத்திய பட்டு வாரியம் மற்றும் பட்டு வளர்ச்சி துறை சார்பில் விவசாயிகள் நோய் தடுப்பு செயல்விளக்க முகாம் நடந்தது. பட்டு வளர்ச்சி துறை உதவி இயக்குனர் பன்னீர்செல்வம் தலைமை வகித்தார். மத்திய பட்டு வாரிய ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க மைய விஞ்ஞானி செல்வராஜ் முன்னிலை வகித்தார். பயிற்சியில், உடுமலை பகுதியில் சில இடங்களில் மல்பெரி செடிகளில் வேர் அழுகல் நோய் காணப்படுகிறது. இந்நோய் ஒரு வகை பூஞ்சாணத்தின் மூலம் பரவுகிறது. நோயை கட்டுப்படுத்த நோய் தாக்கிய செடிகளை ஒன்றரை அடி உயரத்தில் வெட்டி விட வேண்டும். செடியை சுற்றிலும் பள்ளம் தோண்ட வேண்டும். பின்னர் "நவீன்யா' மூலிகை மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 10 கிராம் என்ற அளவில் கலந்து வெட்டிய செடியின் மேல்பாகத்திலிருந்து கீழ்பாகம் நனையும் வரை ஊற்ற வேண்டும். பின்னர் பள்ளத்தை மூடி விட்டு, அருகிலுள்ள செடிகளுக்கும் நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும். மருந்து அளித்த பின்னர் 5 நாட்கள் வரை தண்ணீர் பாய்ச்ச கூடாது. இம்முறையை பின்பற்றுவதால் வேர் அழுகல் நோயை அதிகளவு கட்டுப்படுத்த முடியும். நோய்த்தாக்குதல் மல்பெரி தோட்டங்களில் ஏற்படாமல் இருக்க செடிகளுக்கு சரியான அளவு உரங்களை அளிக்க வேண்டும். பரிந்துரைகளின்படி சாண எரு மற்றும் பசுந்தாழ் உரங்களை குறிப்பிட்ட அளவு அளித்தால் நோய் தாக்குதல் ஏற்படாமல் தடுக்கலாம். தற்போது உடுமலை பகுதியின் சில இடங்களில் குறிப்பாக தாந்தோணி, துங்காவி போன்ற பகுதிகளில் பட்டுப்புழுக்களுக்கு ஊசி ஈ தாக்குதல் ஏற்படுகிறது. இதை கட்டுப்படுத்த விவசாயிகள் ஒருங்கிணைந்த முறையில் புழு வளர்ப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும். புழு வளர்ப்பு மனையை சுற்றிலும் கொசு வலை அமைக்க வேண்டும். மனையின் உள்ளே நுழையும் பகுதியில் முகப்பு அறை அமைத்து, ஊசி ஈக்களை கவர்ந்திழுக்கும் மாத்திரைகளை வைக்கலாம். "நிஸோலிநிக்ஸ்தைமஸ்' என்ற ஒட்டுண்ணியை 100 முட்டை தொகுதிக்கு 2 பாக்கெட் வீதத்தில் புழு வளர்ப்பு மனையில் புழுவின் நான்காவது தோலுரிப்பிற்கு பிறகு விட வேண்டும். ஊசி பவுடரை புழுக்களின் 3 வது காலகட்டத்தில் தோலுரிப்பிற்கு பின் இரண்டாவது நாளும், நான்காவது தோலுரிப்பிற்கு பிறகு இரண்டு அல்லது ஐந்தாவது நாள் பரிந்துரைக்கப்பட்ட அளவு

புழு வளர்ப்பு மனையில் தெளிக்கலாம். நோய் தடுப்பு முறைகளை பரிந்துரை அடிப்படையில் பின்பற்றினால், தரமான பட்டுக்கூடுகளை உருவாக்கலாம்', இவ்வாறு செயல்விளக்கத்தில் விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

**பரவலான மழையால் பசுந்தேயிலை அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 10,2011,23:28 IST

மஞ்சூர்:பரவலான மழையால் தேயிலை தோட்டங்களில் பசுந்தேயிலை மகசூல் அதிகரித்துள்ளது.நீலகிரி மாவட்டம் மஞ்சூர் சுற்றுவட்டார பகுதிகளில் தேயிலை விவசாயம் பிரதான தொழிலாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பகுதிகளில் 8 கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள், ஏராளமான தனியார் தொழிற்சாலைகள் செயல்பட்டு வருகின்றன. தேயிலை விவசாயிகள் தங்களது தோட்டத்தில் பறிக்கும் பசுந்தேயிலையை கூட்டுறவு தேயிலை தொழிற்சாலை, தனியார் தொழிற்சாலைக்கு வினியோகித்து வருகின்றனர். நடப்பாண்டு கடந்த மார்ச் மாதம் துவக்கத்திலிருந்து பரவலாக மழை பெய்து வருவதால் தேயிலை விவசாயிகள் தோட்டங்களை பராமரித்து அதற்கான உரம் இட்டு பராமரித்து வந்தனர். மழை பெய்த பின் மிதமான வெயில் தென்படுவதால் ஏற்ற சீதோஷ்ண நிலை ஏற்பட்டு தேயிலை தோட்டங்களில் பசுந்தேயிலை மகசூல் கூடுவதால், தொழிற்சாலைகளிலும் பசுந்தேயிலை கொள்முதல் அதிகரிக்கிறது.

கடந்த ஒரு மாதமாக மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வந்தது. கடந்த இரண்டு வாரமாக மழை ஓய்ந்து, மிதமான வெயில் தென்பட்டு வருகிறது. இதனால் ஏற்பட்ட ஏற்ற சீதோஷ்ண நிலை காரணமாக தேயிலை தோட்டங்களில் பசுந்தேயிலை துளிர் விட்டு, மகசூல் அதிகரிக்க துவங்கியுள்ளதால், தொடர்ந்து தொழிற்சாலைகளிலும் பசுந்தேயிலை கொள்முதல் அதிகரிக்கிறது. அரசு மானியம் கிடைப்பதால், விவசாயிகள் கூட்டுறவு தொழிற்சாலைக்கு இலையை வினியோகம் செய்ய ஆர்வம் காட்டி வருகின்றனர்.

**மானாவாரி நிலத்திற்கு ரூ.70 ஆயிரம் மானியம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 10,2011,22:44 IST

தேனி : மானாவாரி நிலத்தை மேம்படுத்தி, நிரந்தரவருவாய் பெறும் திட்டம், செயல்படுத்தப்பட உள்ளது. தோட்டக்கலை துணை இயக்குனர் முருகன் கூறியதாவது: மானாவாரி நிலத்தில் பயிர்,

ஊடுபயிர் சாகுபடி செய்து விவசாயிகளுக்கு வருவாயை அதிகரிக்க வகையிலும், நிரந்தர வருவாய் பெறும் வகையிலும், நிலத்தை மேம்படுத்த தோட்டக்கலைத்துறை திட்டமிட்டுள்ளது. இதற்காக ஒரு ஹெக்டேருக்கு 70 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. நில மேம்பாடு, உரம், பூச்சி மருந்து போன்ற பயன்பாடுகளுக்கு ஏற்ற வகையில் இந்த தொகை பிரித்து வழங்கப்படு கிறது. விவசாயிகள் தோட்டக்கலை அலுவலருக்கு விண்ணப்பிக்கலாம், என்றார்.

**நெல் வரத்து குறைவால் அரிசி விலை உயரும்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 10,2011,22:32 IST

காரைக்குடி : மழைகாலம் வரஉள்ளதால், புதுவயல் அரிசி ஆலைகளுக்கு நெல் வரத்து குறையும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், அரிசி விலை உயரும் என தெரிகிறது. சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அருகே புதுவயல், பள்ளத்தூரில் 60க்கும் மேற்பட்ட நவீன அரிசி ஆலைகள் உள்ளன. தஞ்சை, புதுக்கோட்டை, ஆவுடையார்கோவில், தேனி, விருதுநகர் உட்பட தமிழகத்தின் பல பகுதிகளில் விளையும் நெல் இங்கு கொள்முதல் செய்யப்படுகிறது. தமிழகத்தின் இரண்டாவது பெரிய சந்தையான இப்பகுதியில் கல்சர், கர்நாடகா பொன்னி, அதிசய டீலக்ஸ் ரக அரிசி தினமும் 600 டன் வரை உற்பத்தி செய்யப்படுகிறது. நெல் வரத்தை பொறுத்து அரிசி விலையில் அவ்வப்போது மாற்றம் காணப்படும். சமீபத்தில் நடந்த லாரி "ஸ்டிரைக்' எதிரொலியாக கிலோவிற்கு 50 பைசா வீதம் அனைத்து ரக அரிசியும் விலை உயர்த்தப்பட்டது. அரிசி ஆலை உரிமையாளர் சங்க மாநில நிர்வாகி ஒருவர் கூறுகையில், "" தற்போது, கிலோ டீலக்ஸ் பொன்னி ரூ. 25க்கும், அதிசய டீலக்ஸ் ரூ.20க்கும், கல்சர் பொன்னி ரூ.19க்கும், கர்நாடகா பொன்னி ரூ.26க்கும் விற்கப்படுகிறது. செப்.15ம் தேதி முதல் டிசம்பர் இறுதி வரை மழை காலம் என்பதால், உள்ளூர் மற்றும் வெளி மாவட்டங்களில் இருந்து நெல் வரத்து முற்றிலும் பாதிக்கப்படும். புதிதாக நெல் கொள்முதல் செய்வதில் ஆலைகளுக்கு சிக்கல் உள்ளது. எனவே, ஒரு சில வாரங்களில் அரிசி விலை உயரும் நிலை உள்ளது." என்றார்.